Holland Bloorview
Kids Rehabilitation Hospital

வாடிக்கையாளர் பெயர்: ____________

உடல்நலப் பதிவேடு எண்: ____________

பிறந்த தேதி: ____________

## BOTOX® பயன்படுத்தப்படும் சிகிச்சைக்கு ஒப்புதல்

(Botulinum Toxin Type A) ஊசிமருந்து

**பின்னணி மற்றும் நோக்கம்**

BOTOX® (Botulinum Toxin Type A) ஊசிமருந்து பயன்படுத்தி செய்யப்படும் சிசிச்சை உங்களுக்கு ஏற்றதாக இருக்கும் என்று உங்கள் மருத்துவர் கருதுகிறார்.

______________________________________________________________ .

கைகள் அல்லது கால்களில் (hypertonia) அதிவிறைப்பு (அதிகமான நிறம், தசைப்பிடிப்புகள்) இருக்கும் காரணமாக இந்தச் சிகிச்சை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சி சிகிச்சை, மருந்து, வார்ப்பு, பிணைப்புகள் மற்றும் அறுவைசிகிச்சை முறைகளும் மாற்று சிகிச்சை வாய்ப்புகளாகக் கருதப்பட்டுள்ளன.

Health Canada ஒப்பளிப்பு அளித்திருக்கும் BOTOX® மருந்தில் சிறிய அளவு அல்புமின், இது மனித இரத்த தயாரிப்பு உள்ளது.

**சிகிச்சை நடைமுறைகள்**

BOTOX® மருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தசைகளுக்குள் (ஒரு ஊசி மூலம்) செலுத்தப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஊசிமருந்துச் சிகிச்சை 3 முதல் 6 மாதங்களுக்கு ஒரு முறை தேவைப்படலாம் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

BOTOX® பயன்பாட்டுக்கான Health Canada வெளியிட்டிருக்கும் குறிப்பில் குறிப்புச்சீட்டு ஒரு கிலோகிராமுக்கு 6 யூனிட்டுகள் என்ற மருந்தளவில் அதிகபட்சமாக 3 மாத காலத்தில் 200 யூனிட்டுகள் என்ற பரிந்துரைக்கப்பட்ட அளவு மூலம் dynamic equinus (toe pointing) சிகிச்சைக்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளது என்பதை நான் அறிகிறேன். என் குழந்தையின் hypertonia நிலைமைக்கு என்/என் குழந்தையின் மருத்துவர் அதிக டோஸ் மருந்தைப் பரிந்துரைக்கக்கூடும் என்று எனக்குத் தெரியும். என்/என் குழந்தையின் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்தளவு சமீபத்திய அறிவியல் தகவல்கள், குழந்தையின் எடை மற்றும் ஊசி ஏற்றப்படும் தசைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

பின்வரும் **பக்க விளைவுகள்** ஏற்படலாம் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

- எரிச்சல், ஊசி போட்ட இடத்தில் இரத்தக்கசிவு / கன்றுதல் (0.8% அல்லது 1000 நோயாளிகளில் 8 பேருக்கு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது)
- ஊசி போட்ட தசைக்கு அருகில் இடஞ்சார்ந்த தற்காலிக பலவீனம் (1% பேருக்கு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது)
- தற்காலிகமாக சிறுநீர் அடக்க இயலாமை (1% பேருக்கு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது)
- ஊசி போடாத பகுதியில் தசையில் ஏற்படும் பலவீனம் நச்சுத்தன்மை பொதுவாகப் பரவியிருப்பதைக் குறிக்கிறது (தொங்கிய கண் இமைகள், தெளிவற்ற பேச்சு, விழுங்குவதில் சிரமம், சுவாசிப்பதில் சிரமம், அல்லது பொதுவான தசை பலவீனம் போன்றவை உள்ளிட்ட அறிகுறிகள் மிகவும் இலேசானது முதல் கடுமையானது வரை இருக்கலாம்) (0.4% அல்லது 1000 நோயாளிகளில் 4 பேருக்கு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது)

மிகச் சிறிய எண்ணிக்கை நபர்களுக்கு, BOTOX® பயன்படுத்துவதால் விழுங்குவது, பேசுவது அல்லது சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுத்தும் என்பதையும், ஒரு சில அரிதான சம்பவங்களில் போடோக்ஸ்® பயன்பாடு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கையும் மரணமும் சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளது என்பதையும் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். BOTOX® சிகிச்சை எடுத்துக்கொண்ட ஓரிரு நாட்களிலும் மற்றும் சிகிச்சை முடிந்த பிறகு பல வாரங்கள் கழித்தும் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளின் அறிகுறிகள் மற்றும் அடையாளங்களைப் பற்றிய தகவல் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. என் குழந்தைக்கு இந்த அடையாளங்களும் அறிகுறிகளும் ஏற்பட்டால் உடனடி மருத்துவக் கவனிப்பிற்காக என் குழந்தையை அழைத்துவர வேண்டும் என நான் அறிகிறேன். BOTOX® மருந்து வலிப்புத்தாக்கங்கள் தொடர்புப் படுத்தப்படுகிறது என்றாலும், வலிப்புகளுக்கு BOTOX® தான் காரணம் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்பதையும் நான் அறிகிறேன். BOTOX® மருந்து ஊசி போட்ட தசை சிறிது பலவீனமாக இருக்கும் என்றும், இந்த பலவீனம் குணமாவதற்கு 2 ஆண்டுகள் வரை ஆகலாம் என்பதையும் நான் அறிகிறேன். BOTOX® குழந்தைகளிடம் 15 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் கூட, BOTOX® மருந்து தசைகளில் ஏற்படுத்தும் சில நீண்டகால விளைவுகள் இன்னும் தெரியாமலேயே இருக்கிறது.

BOTOX® பற்றிய போதுமான வாய்மொழி / எழுத்துவழித் தகவல் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது மற்றும் இந்தச் சிகிச்சைக்கு நான் ஒப்புதல் அளிக்கிறேன்.

______________________________________________________________

வாடிக்கையாளரின் / தீமானிக்கும் பதிலாளின் கையொப்பம் அச்சு எழுத்தில் பெயர் உறவுமுறை

______________________________________________________________

சாட்சியின் கையொப்பம் தேதி

*CON TREAT BOTOX*